NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 29 July 2015

# தனியார் வீட்டு விலைகளில் சரிவு

சிங்கப்பூரின் தனியார் வீடுகளின் மறுவிற்னை விலைகள் ஜூன் மாதத்தில் மீண்டும் வீழ்ச்சி கண்டன என்று சிங்கப்பூர் குடியிருப்பு விலைக் குறியீடு தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக சொத்து ஆய்வுக் கழகம் தொகுத்து நேற்று வெளியிட்ட சிங்கப்பூர் குடியிருப்பு விலைக் குறியீட்டில், முன்னைய மாதத்தைக் காட்டிலும் ஜூன் மாதத்தில் விலைகள் 0.3 விழுக்காடு சரிந்தன என்றும் மே மாதத்தில் தனியார் வீடுகளின் மறுவிற்னை விலைகள் அதற்கு முந்திய மாதத்தைக் காட்டிலும் 0.6 விழுக்காடு சரிந்தன என்றும் தெரிவித்தது.

506 சதுர அடி மற்றும் அதற்குக் குறைவான சிறிய வீடுகளின் விலைகள் 1.1 விழுக்காடு சரிந்தன. மத்திய வட்டாரம் அல்லாத பகுதிகளில் உள்ள வீட்டு விலைகள் சிறிய வீடுகளைத் தவிர்த்து, மே மாதத்தைக் காட்டிலும் 0.9 விழுக்காடு சரிந்தன என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. மத்திய வட்டாரத்தில் உள்ள வீடுகள், சிறிய வீடுகளைத் தவிர்த்து, நடப்பு நிலவரத்துக்கு மாறாக முன்னைய மாதத்தைக் காட்டிலும் 0.3 விழுக்காடு அதிகரித்தது என்றும் சிங்கப்பூர் குடியிருப்பு விலைக் குறியீடு கூறியது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.